செ.வெ.எண்.129 நாள்.10.2.2010

செய்தி வெளியீடு–10.2.2010

# இந்தியாவிலேயே முதன் முறையாக அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவ மாணவியர்க்கு பட்டப்படிப்புடன் தொழிற்பயிற்சிக்கான பட்டய / சான்றிதழ் படிப்பு மூன்றாண்டுகளில் அளிக்கும் புதிய திட்டம்!

## முதலமைச்சர் கலைஞர் தொடங்கி வைத்து மாணவ மாணவியர்க்கு வாழ்த்து கூறினார்!

தமிழகத்தில் உள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் மாணவ மாணவியர் வேலைவாய்ப்புகளைப் பெருக்கிக் கொள்வதற்கு உதவியாக பட்டப்படிப்புடன் தொழிற்பயிற்சிக்கான பட்டய–சான்றிதழ் படிப்பு ஒன்றையும் சேர்த்து மூன்றாண்டுகளில் வழங்கும் ஒரு புதிய திட்டம் இந்தக் கல்வியாண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தியாவிலேயே முதல்முறையாகக் கல்வி கற்கும்போதே வேலைவாய்ப்புகளைப் பெருக்கிக்கொள்ளும் திட்டமாகத் தமிழகத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள இத்திட்டத்தின்கீழ் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுடன் அந்தந்த மாவட்டங்களில் உள்ள குறிப்பிட்ட பாலிடெக்னிக் கல்லூரிகள் இணைக்கப்பட்டுள்ளன.

கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவர்களுக்கு ஆறுமாதம் அல்லது ஓராண்டு காலப் பயிற்சிக்குப் பிறகு பட்டயம் அல்லது சான்றிதழ் படிப்புக்கான சான்றிதழ் தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தால் வழங்கப்படும்.

இத்திட்டம் மாணவர்கள் பட்டப்படிப்புப் பயிலும் காலத்திலேயே இத்தொழில் பயிற்சியை பயிலவும் வகை செய்கிறது. இத்திட்டத்தில் Multimedia, Tally, A.C. Technology, Hardware Servicing, Domestic Wiring, Net Working, Web Designing and Animiation, E-Commerce, Driving (Light and Heavy Vehicles), Beautician, Garment Quality Inspection and Export Merchandising, Communication Skill, Office Automation, Survey, D.T.P. போன்ற பாடப்பிரிவுகள் இடம் பெற்றுள்ளன.

இப்புதிய திட்டத்தில் இந்த ஆண்டில் 3 ஆயிரத்து 571 மாணவர்கள் சேர்ந்துள்ளனர். புதுமையான வேலைவாய்ப்புகளுக்கு வழிவகுக்கும் இத்திட்டத்தை முதலமைச்சர் கலைஞர் இன்று தொடங்கி வைத்து மாணவ மாணவியர்க்கு வாழ்த்துக் கூறினார்.

இந்நிகழ்வின்போது, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, உயர்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் திரு. க. கணேசன் ஆகியோர் உடனிருந்தனர்.

*****

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9